IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

STC No.1352/2025

Deposition of Witness PW1

Name : நடராஜ் Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.01.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

All Accused absent. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

நான் தற்போது வடக்கு போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போது ஈரோடு டவுன் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். 14.02.2024 தேதி என்று டவுன் காவல் நிலைய உதவி ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி, முதல்நிலைக் காவலர் மெய்யழகன், காவலர் ஜெயபிரகாஷ், ஆகியோருடன் நானும் பன்னீர்செல்வம் பார்க் ஜங்ஷன் அருகில் ரோந்து சென்ற போது விடுதலை சிறுத்தைகள் கட்சியை சேர்ந்த SM சாதிக் தலைமையில் சாலை மறியல் செய்வதற்காக இருந்தார்கள். உதவி ஆய்வாளர் என்ன காரணத்திற்காக சாலை மறியல் செய்வதாக கேட்டபோது சூரம்பட்டி வலசு மாரியம்மன் கோவில், மதுரை வீரன் கோவில், பொட்டு சாமி கோவில் மற்றும் இரண்டு கோயில்களை

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.01.19 19:54:28 +0530

இடித்துவிட்டு புதிதாக கட்டுவதற்காக ஊர்மக்கள் தன்னிச்சையாக இடித்ததை கண்டித்து சாலை மறியல் செய்வதாக சொன்னார்கள். அனுமதி இல்லாமல் சாலை மறியல் செய்யக்கூடாது என்று சொல்லி உதவி ஆய்வாளர் அவர்களை கலைந்து போக சொன்னார். அவர்கள் கேட்காமல் சாலை மறியல் செய்தார்கள். அதனால் அவர்களை கைது செய்து நிலையம் கொண்டு வந்து 12.30 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. சாலை மறியல் செய்தவர்கள் 15 நபர்களுக்கு மேல் இருப்பார்கள். இது குறித்து டவுன் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாலை மறியல் செய்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் இடது புறமாக நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்திற்கு வலது புறம் நகராட்சி கழிப்பிடம் மற்றும் மற்ற கடைகள் உள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து காலை 10 மணிக்கு நான்கு போலீசார் ரோந்து சென்றோம். நான்கு போலீசாரும் இருசக்கர வாகனத்தில் தனித்தனியாக சென்றோம். காவல் நிலையத்திலிருந்து ரோந்து பணிக்கு நேராக பேருந்து நிலையம் சென்று அங்கு அரை மணி நேரம் இருந்தோம். பேருந்து நிலையத்தில் சட்டம் ஒழுங்கு மற்றும் குற்றப்பிரிவு போலீசார் வழக்கமாக அங்கு இருப்பார்கள் என்றால் சரிதான்.

பேருந்து நிலையத்திலிருந்து சவீதா ஹாலுக்கு ரோந்து பணிக்கு சென்று அங்கு சுமார் கால் மணி நேரம் இருந்தோம். பின்னிட்டு அங்கிருந்து சூரம்பட்டி அரசு மருத்துவமனை வழியாக வந்து ரோந்து பணிக்கு சென்றோம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு

S
RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.01.19 19:54:34 +0530

அருகில் சர்ச் மற்றும் ஆட்டோ ஸ்டாண்ட் உள்ளது என்றால் சரிதான். ஆட்டோ ஸ்டாண்ட் ஒட்டினார் போல் வரிசையாக நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமானது வண்டி வாகனங்கள் அதிகம் சென்று வருவதோடு பொதுமக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தை ஒட்டினார் போல் போக்குவரத்து காவலர் அங்கு இருப்பார் என்றால் சரிதான். நாங்கள் நான்கு பேர் தான் ஈச்சர் போலீஸ் வாகனத்தில் எதிரிகளை நகர காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றோம். வழக்கு சம்பவ இடத்திற்கு மிக அருகாமையில் தான் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சம்பவம் இடத்திற்கு நான் முதன் முதலில் சென்றபோது 11:30 மணி இருக்கும். வழக்கு சம்பவத்தை அருகில் இருந்த கடைக்காரர்கள் பார்த்தார்கள் என்றால் சரிதான்.

வழக்கு சம்பவத்தில் இருந்து தான் சொல்லப்படும் நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள பதினைந்து நபர்களின் பெயர் விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு சம்பவம் சுமார் கால் மணி நேரம் நடந்தது. வழக்கு சம்பவம் தொடர்பாக புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்கப்பட்டதா என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு சம்பவ இடத்தில் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லப்படும் நபர்களும் போலீசாராகிய நாங்களும் முக்கால் மணி நேரம் அங்கு தான் இருந்தோம் என்றால் காவல் வாகனத்தை வரவழைத்து விட்டு அங்குதான் இருந்தோம். இது சம்பந்தமாக நகர காவல் நிலையத்திற்கு தொலைபேசி மூலமாக எத்தனை மணிக்கு தகவல் கொடுத்தோம் என்றால் எனக்கு தெரியாது. எதிரிகளை

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.01.19 19:54:41 +0530

நகர காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றபோது 12:15 மணி இருக்கும். எதிரிகளை சம்பவ இடத்திலேயே கைது செய்து விட்டோம். வழக்கு சம்பவம் தொடர்பாக அருகில் உள்ள மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு தகவல் சொன்னோம் என்றால் உதவி ஆய்வாளருக்கு தான் தெரியும். ரோந்து பணிக்கு சென்ற நாங்கள் ஒரே நேரத்தில் எல்லா இடத்திற்கும் ரோந்து சென்றோம். நான் அந்த சமயத்தில் பீட் எண் இரண்டில் பணியில் இருந்தேன். பீட் இரண்டு பகுதி ஆனது மரப்பாலம், வளையல் கார வீதி மற்றும் கனி மார்க்கெட் ஆகும். ஒரு பீட்டிற்கு இரண்டு பேர் செல்வது வழக்கம் என்றால் சரிதான். என்னுடன் வந்த மற்றொரு போலீசார் யார் என்றால் அன்றைய தினம் நான் மட்டும்தான் பீட்டிற்கு சென்றேன்.

உதவி ஆய்வாளர் ரவுண்ட்ஸிற்கு அழைத்ததால் நான் அப்போது சென்றேன். உதவி ஆய்வாளர் என்ன காரணத்திற்காக ரோந்து பணி அழைத்தார் என்று தெரிந்து கொண்டேன் என்றால் குற்ற செயல் நடக்காமல் இருப்பதற்காக அழைத்தார். அன்றைய தினம் ஆயுதங்கள் எதுவும் நாங்கள் எடுத்துக் கொண்டு செல்லவில்லை. எனக்கென்று ஒதுக்கப்பட்ட பீட்டிற்கு நான் அன்றைய தினம் பணிக்கு செல்லவில்லை என்றால் காலை 8 மணிக்கு நான் சென்று விட்டு வந்து விட்டேன். நான் ரோந்து பணி சென்றது சம்பந்தமாக எனக்கென்று ஒதுக்கப்பட்ட நாட்குறிப்பேட்டிலும் காவல் நிலையத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பொது நாட்குறிப்பேட்டிலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் புகார்தாரர் உதவி ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி என்றால் சரிதான். எதிரிகள் எந்த வாகனத்தில் வந்தார்கள் என்று தெரிந்து

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.01.19 19:54:48 +0530

கொண்டேனா என்றால் இல்லை. எத்தனை மணிக்கு எதிரிகள் வந்தார்கள் என்று தெரிந்து கொண்டனர் என்றால் இல்லை நாங்கள் போகும்போது அங்கு இருந்தார்கள். எதிரிகளை வாகனத்தில் ஏற்றும் போதே அவர்களின் பெயர் விவரங்கள் குறித்து உதவி ஆய்வாளர் குறித்துக் கொண்டாரா என்றால் எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் நான் உட்பட காவலர்கள் யாரும் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்பவ இடத்தில் கோவில் பிரச்சனைக்காக 10,15 நபர்கள் மறியல் செய்தார்கள் என்றும் நாங்கள் சொல்லியும் கலைந்து போகவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் எதிரிகள் சாலை மறியல் செய்யவில்லை என்றும், வழக்கு சம்பவ இடத்திற்கு நான் செல்லவில்லை என்றும், நான் உட்பட மற்ற காவலர்கள் சேர்ந்து எதிரிகளை கைது செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரில் புள்ளி விவர கணக்கிற்காக நடக்காத சம்பவத்தை நான் பார்த்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எத்தனை எதிரிகள் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று என்னால் குறிப்பிட்ட சொல்ல இயலாது என்றால் சரிதான். சம்பவத்தன்று நிறைய கூட்டம் இருந்தது என்றும், நிறைய பேர் இருந்தார்கள் என்றும், நிறைய பேர் சென்று விட்டார்கள் என்று சொன்னால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.01.19 19:54:54 +0530